# கன ரக சரக்கு வாகனச் சந்தையில் 15% பங்கு: வோல்வோ ஐஷர் திட்டம்

**புது தில்லி, ஜன. 20:** கன ரக சரக்கு வாகனச் சந்தையில் 15 சதவீதப் பங்கினைப் பெறத் திட்டமிட்டிருப்பதாக வோல்வோ ஐஷர் நிறுவனம் தெரிவித்தது.

வோல்வோ குழுமம் - ஐஷர் மோட்டார்ஸ் இடையேயான கூட்டு நிறுவனமான வோல்வோ ஐஷர் வர்த்தக வாகன நிறுவனம், 3 புதிய கன ரக லாரிகளை புது தில்லியில் செவ்வாய்க்கிழமை அறிமுகம் செய்தது. இந்நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி வினோத் அகர்வால் இது தொடர்பாக செய்தியாளர்களிடம் தெரிவித்த விவரம்:

கடந்த 4-5 ஆண்டுகளில் ரூ. 2,300 கோடி முதலீடு செய்து உற்பத்தி திறனைப் பெருக்கியுள்ளோம். புதிய மாடல்களை உருவாக்குவது, ஏற்கெனவே உள்ள மாடல்களை மேம்படுத்துவது போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

'ப்ரோ-6000' ரக வரிசையில், 16 டன் முதல் 49 டன் வரையிலான திறனுள்ள அதிகன ரக சரக்கு வாகனப் பிரிவில் கணிசமான பங்கைப் பெறுவதே வோல்வோ ஐஷர் நிறுவனத்தின் குறிக்கோளாகும். தற்போது 21 டன் முதல் 31 டன் வரை திறன் கொண்ட 3 லாரிகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இவற்றின் மூலம், இந்தப் பிரிவில் 15 சதவீதப் பங்கினைப் பெற முடியும் என நம்புகிறோம். இப்போது அறிமுகமாகியுள்ள மாடல்களின் விலை ரூ. 21 லட்சம் முதல், ரூ. 30 லட்சம் வரை இருக்கும் என்றார்.

வோல்வோ குழுமத்தின் துணைத் தலைவர் ஃபிலிப் திவ்ரி கூறுகையில், 'ப்ரோ' வரிசையில் அறிமுகமாகியுள்ள புதிய கன ரக வாகனங்கள் மூலம், ஆசியா மட்டுமல்லாமல் பிற வளரும் சந்தைகளுக்கும் நிறுவனத்தின் ஏற்றுமதி விரிவடைய உதவும் என்றார்.

'ப்ரோ-1000', 'ப்ரோ-3000' வரிசையில் ஏற்கெனவே சரக்கு வாகனங்களை அறிமுகம் செய்துள்ளது இந்நிறுவனம்.